OS 166/2020

வா.சா.1 சடையாண்டி த/பெ கிருஷ்ணமூர்த்தி

நாள் 02.02.2026

**குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்து விவசாய நிலம் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் சர்வே எண் பரப்பளவு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கை பிரதிவாதி மீது 2 பரிகாரங்கள் கேட்டு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் தெரியாது நீதிமன்றம் சாட்சியிடம் பரிகாரம் என்றால் என்ன என்று கேட்டதற்கு அதன் அர்த்தம் தெரியாது என்று பதில் கூறினார். என்னிடம் காட்டப்படும் முதன்மை விசாரணை வாக்குமூலம் நான் தாக்கல் செய்தது தான் அதில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள முதன்மை வாக்குமூலத்தில் சொத்து குறித்து சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். அடமானப்பத்திரம் போட்டேனா என்றால் இல்லை கிரையப்பத்திரம் எழுதினேன். நானும் பிரதிவாதியும் முதலில் ஒரு கிரையப்பத்திரம் எழுதினோம் என்றாலும் அது தப்பு என்று சொன்ன பிறகு கிரையஒப்பந்தம் எழுதினோம் என்றால் இல்லை. நானும் பிரதிவாதியும் முதலில் கிரையப்பத்திரம் எழுதினோம் என்றாலும் பிறகு கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

2. நீதிமன்றத்தில் மீதி தொகையை தீர்ப்பு வந்த பிறகு தான் செலுத்தினேன் என்றால் சரிதான். எனக்கும் பிரதிவாதிக்கும் இதற்கு முன்னர் வேறு கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் உள்ளது. வழக்கு கிரைய ஒப்பந்தத்தில் பிரதிவாதியின் தகப்பனாரிடம் கையொப்பம் வாங்கினேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தின் பட்டா பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் இருந்ததை கிரைய ஒப்பந்தம் மற்றும் வழக்குரை மற்றும் முதன்மை வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து எந்த ஊரில் இருக்கிறது என்றால் வடுகசாத்து கிராமத்தில் உள்ளது இடத்தை பார்த்து தான் பதிவு செய்தோம். வழக்கு சொத்து விவசாய நிலமா என்றால் ஆமாம். நான் எழுதி வாங்கிய கிரைய ஒப்பந்தத்தில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் பிரதிவாதியின் ஊர் ஆட்கள் கையொப்பம் செய்தார்கள் பெயர் தெரியாது. (பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)